V9SS

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டு பொதுத்தேர்வு - 2023

-----

காலஅளவு: 3.00 மணிநேரம் | வகுப்பு 9 சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **14×1=14**

1) வேளாண்மை மற்றும் விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் தொடங்கிய காலகட்டம் ..........
அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) பெருங்கற்காலம்

2) ஹரப்பா மக்கள் .......... பற்றி அறிந்திருக்கவில்லை
அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்

3) சேரர்களை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது?
அ) புகளூர் ஆ) கிர்நார் இ) புலிமான்கோம்பை ஈ) மதுரை

4) மும்மணிகள் (திரிரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் ..........
அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்

5) சரியான கூற்றினை தேர்வு செய்க.
i) கிரீஸின் மீதான முதல் பாரசீகத் தாக்குதல் தோல்வியடைந்தது
ii) ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஜூலியஸ் சீஸர் ஒரு காரணகயிருந்தார்.
iii) ரோமின் மீது படையெடுத்த கூட்டத்தினர் பண்பாட்டில் மேம்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர்.
iv) பௌத்தமதம் ரோமப்பேரரசை வலுவிழக்கச் செய்தது
அ) i) சரி ஆ) ii) சரி இ) ii) மற்றும் iii) சரி ஈ) iv) சரி

6) புவி அதிர்வு உருவாகும் புள்ளி ........... என்று அழைக்கப்படுகிறது.
அ) மேல்மையம் ஆ) கீழ்மையம்
இ) புவி அதிர்வு அலைகள் ஈ) புவி அதிர்வின் தீவிரம்

7) பருவக்காற்று என்பது ..........
அ) நிலவும் காற்று ஆ) காலமுறைக் காற்றுகள்
இ) தலக்காற்று ஈ) மேற்கண்ட எதுமில்லை

8) பெருங்கடலின் வெப்பநிலை ஆழத்தை நோக்கிச் செல்லச் செல்ல ..........
அ) அதிகரிக்கும் ஆ) குறையும்
இ) ஒரே அளவாக இருக்கும் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

9) உயிர்க்கோளத்தின் மிகச்சிறிய அலகு ...........
அ) சூழ்நிலை மண்டலம் ஆ) பல்லுயிர்த் தொகுதி
இ) சுற்றுச்சுழல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

10) பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) இந்தியா ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
இ) பிரான்ஸ் ஈ) வாட்டிகன்

11) நோட்டா (NOTA) முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 2012 ஆ) 2013 இ) 2014 ஈ) 2015

12) ............... கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி கற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.
அ) இலக்கியம் ஆ) அமைதி இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்

13) தேசிய வருமானத்தின் உண்மை மதிப்பீடாக இவை கருதப்படுகிறது
அ) மொத்த நிகர உற்பத்தி ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
இ) நிகர தேசிய உற்பத்தி ஈ) நிகர உள்நாட்டு உற்பத்தி

14) கூற்று (A) : ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை மற்றும் சிறுதொழில் செய்வதாகும்
காரணம் (R) : இங்கு குறைவான ஊதியமும் மற்றும் வேலைகள் முறையாக வழங்கப்படுவதில்லை
அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் சரி
ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, கூற்றுக்கான காரணம் தவறு
இ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு
ஈ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

பகுதி - II

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **10×2=20**
**வினா எண் : 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15) ஊகக்காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?
16) ஹமுராபியின் சட்டம் முக்கியமான சட்ட ஆவணமாகும் - விவரி.
17) சங்க காலம் குறித்து அறிந்து கொள்ள நாணயங்கள் எந்தளவுக்கு ஒரு முக்கிய சான்றாக உள்ளன?

V9SS

18) கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன?
19) புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.
20) வானிலைச் சிதைவு - வரையறு.
21) காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
22) கடல் அலைகளைப் பற்றிச் சுருக்கமாக விடையளி.
23) சூழ்நிலை மண்டலம் என்றால் என்ன?
24) ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
25) அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன?
26) அடிப்படை உரிமைகள் யாவை?
27) சூரியசக்தி என்றால் என்ன?
28) பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?

## பகுதி - III

**10×5=50**

**எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் : 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக.**
i) ............ என்பது மனிதத் தலையும், சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.
ii) கங்கைச் சமவெளியில் ........... வேளாண்மைக்கு மாடுகளின் தேவை அவசியமானது
iii) ........... வம்சத்தினரின் ஆட்சியின் போது தான் பௌத்தம் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு வருகை தந்தது.
iv) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ............ ஆவார்.
v) தேசிய மனித உரிமை ஆணையம் .......... ஆண்டு அமைக்கப்பட்டது.

30) **பொருத்துக.**
அ) இந்து வாரிசுரிமைச் சட்டம் - மொகஞ்சதாரோ
ஆ) தேசியக் கட்சி - 18
இ) வாக்குரிமை - தத்துவஞானி
ஈ) பெருங்குளம் - 2005
உ) பிளாட்டோ - ஏழு

31) **வேறுபடுத்துக.**
அ) கருவம் மற்றும் மேலோடு
ஆ) காற்று மோதும் பக்கம் மற்றும் காற்று மோதாப்பக்கம்
இ) காரணம் கூறுக. கண்டத்திட்டுகள் சிறந்த மீன்பிடித்தளங்களாகும்.

32) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக.
33) தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்க கால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின.
34) செவ்வியல் காலத்தில் இந்தியாவின் நிலை குறித்து எழுதுக.
35) எரிமலைகளால் உண்டாகும் விளைவுகள் யாவை?
36) பனியாறு என்றால் என்ன?
37) கடல் நீரோட்டங்கள் என்றால் என்ன?
38) மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
39) தொழிலாளர் சட்டத்தின் மூலம் தொழிலாளர் பெறும் நன்மைகள் யாவை?
40) புதுப்பிக்கதக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்க தகாத வளங்கள் - வேறுபடுத்துக.
41) விவரி - அ) முதன்மை துறை ஆ) இரண்டாம்துறை இ) சார்புத்துறை
42) கீழ்க்காணும் இடங்களை தென்னிந்திய வரைபடத்தில் குறிக்கவும்.
அ) மதுரை ஆ) சென்னை இ) தொண்டி ஈ) கீழடி உ) வஞ்சி

## பகுதி - IV

**இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **2×8=16**

43) அ) சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.

44) அ) உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறித்துக் காட்டுக.
அ) சிந்து சமவெளி நாகரீகம் ஆ) இந்தியா இ) இலங்கை ஈ) பசிபிக்பெருங்கடல்
உ) இந்திய பெருங்கடல் ஊ) சீனா எ) இத்தாலி ஏ) ஜப்பான்

**(அல்லது)**

ஆ) உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறித்துக் காட்டுக.
அ) பசிபிக் நெருப்பு வளையம்
ஆ) புவி அதிர்ச்சி மண்டலம் (ஏதேனும் ஒன்று)
இ) இமயமலை
ஈ) டெல்டா (ஏதேனும் ஒன்று)
உ) வெப்பபாலைவனம்(ஏதேனும் ஒன்று)
எ) குளிர்நீரோட்டம் (ஏதேனும் ஒன்று)
ஊ) சுண்ணாம்பு பகுதி(ஏதேனும் ஒன்று)
ஏ) ஆல்ப்ஸ் மலை

- - - - - - -